தரக்கூடிய வகையிலே ஒரு சட்டத்தை நிறைவேற்றி விட்டு, அத்தகைய வாய்ப்பைப் பயன்படுத்திவிட்டு, ஆந்திராவிலே, மகாராஷ்டிரத்திலே, கர்நாடகாவிலே, வங்காளத்திலே இருப்பதைப்போல தமிழ்நாட்டிலேயும் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலே ஒரு திருத்தத்தை இந்த அரசு இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வர வேண்டும் எனக் கேட்டு, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவியார் ஆட்சியில் பிற்பட்ட மக்கள் இன்றைய நடைமுறையில் இருக்கக்கூடிய அந்தத் தேர்தல் சட்டத்தாலே தாங்கள் ஒதுக்கப்பட்டு விடுவோமோ என்கின்ற அச்ச நிலையில் இருந்து மீட்டுத் தரக்கூடிய வகையிலே சட்டத்தில் திருத்தங்களை இந்த மாநிலப் பேரவை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. 243 டி சிக்ஸ்த் பார்ட் அப்படிச் சொல்லுகிறது. அதைக் கவனத்தில் கொண்டு அதை நிறைவேற்றிவிட்டுத் தேர்தலை நடத்தினால் சகல பகுதி மக்களும், பிற்பட்ட மக்களும் மகிழ்ச்சி அடையக்கூடிய நிலை ஏற்படும் என்று கூறி, நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

8. அறிவிப்பு

பேரவை அலுவல்கள் குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி இன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் முன்மொழியப்பெற்ற, மானியக் கோரிக்கைகள் எண் 27--ஊரக வளர்ச்சி, மானியக் கோரிக்கை எண் 48--குடிநீர் வழங்கல் மற்றும் மானியக் கோரிக்கை எண் 49--நகராட்சி நிருவாகம் ஆகியவற்றின் மீதான விவாதமும் பதிலுரையும் நாளையும் தொடர்ந்து, பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்பெறும்.

நாளை 21-4-1995 அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 4--பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் நிருவாகம், 25–4–1995 அன்று செவ்வாய்க்கிழமை மாலை ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பெற உள்ள மானியக் கோரிக்கை

[பேரவைத் தலைவர்] [1995 ஏப்ரல் 20

எண் 12--தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் என்பதுடன் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படும். பேரவையின் இதர அலுவல்களில் எவ்வித மாற்றமும் இல்லை.

பிற்பகல் 2-05

7. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 27 -- ஊரக வளர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 48 -- குடிநீர் வழங்கல்

(இ) கோரிக்கை எண் 49 -- நகராட்சி நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. தம்புசாமி, நாளைக்கு அவர் ஊரில் இல்லை. அதனால் அவர் பேசி முடித்ததும், இன்றைய நிகழ்ச்சிகளை முடித்துவிடலாம்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி, குடிநீர் வழங்கல் போன்ற மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற அனுமதி தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியம், அந்தத் தேர்தல்கள் நடத்துவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். தேர்தல் ஆணையம்தான் முடிவு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால், தேர்தல் நடத்துவதற்கு, அதற்கான தேதியை குறிப்பிடுவதற்கு ஆணையத்திற்குத்தான் அதிகாரம் என்று சொன்னால், தேர்தல் நடத்த வேண்டுமென்று எவ்வளவு கோரினாலும், ஆணையம் எடுக்கிற ஒரு முடிவுக்குப் போய் நின்றுவிடுகிற ஒரு சூழ்நிலையிருக்கிறது. ஆகவே,